
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2055 • டிசம்பர் 26, 2024 • புரட்சி 24 • முழக்கம் 51 • விலை ரூ.3.00



**சமூக ஒழுங்கு சீர்கேடுகளை சட்டம் ஒழுங்கு சீர்கேடாக திசை திருப்பும் எதிர்க்கட்சிகள்; ‘ஊடக ஒழுங்குகளைப்’ புறந்தள்ளி ஆட்சிக்கு எதிராகப் பரப்புரை செய்யும் ஊடகங்கள்.**

## ‘இந்து ராஷ்டிரத்தை’ எதிர்த்து நிற்பது திராவிட மாடல் ஆட்சியே!

# சேலத்தில் கூடிய கழக செயலவை தீர்மானங்கள்

**திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 22.12.2024 அன்று மேட்டூரில் நடந்த செயலவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.**

### தீர்மானம் 1

பெரியார் அடையாளப்படுத்திய ஆரிய திராவிட போராட்டம் இப்போது மனு நீதி எதிர் சமூக நீதி, ஹிந்து இராஷ்ட்ரம் எதிர் அரசியல் சட்டம் என்று வடிவெடுத்து இருக்கிறது. ஒன்றிய பாஜக ஆட்சி பெரும்பான்மை அற்ற நிலையிலும் பார்ப்பனிய மனுவாத சீரழிவுக் கொள்கையை நோக்கி நாட்டை இழுத்து செல்கிறது. இதற்கு எதிரான தத்துவார்த்த போராட்டம் தமிழ்நாட்டில் நடந்து வருகிறது,

திராவிட மாடல் ஆட்சி தான் இதைத் தடுத்து நிறுத்தும் வலிமைபெற்ற அரணாக நிற்கிறது. அதை சீர்குலைக்க எந்தவித முறைகேடுகளையும் பயன்படுத்தி அகற்றுவதற்கு தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. திராவிட மாடல் ஆட்சியின் இருத்தல் என்பது பார்ப்பனிய ஹிந்து இராஷ்டர முறியடிப்புக்கான தேவையாகவும் அவசியமானதாகவும் வரலாறு கோரி நிற்கிறது. இந்த அடிப்படை கருத்தை கவனத்தில் கொண்டு அரசுக்கு வலிமை சேர்க்க வேண்டிய அவசியத்தை இந்த செயலவை வலியுறுத்துகிறது. இந்த அரசை ஆதரித்து காப்பாற்ற வேண்டிய கடமை தமிழ்நாட்டு மக்களுக்கு உள்ளது என்பதை சுட்டிக் காட்டுகிறது.

### தீர்மானம் 2

சட்ட ஒழுங்குசீர்குலைவையும்சமூகஒழுங்கு சீர்குலைவையும் பிரித்து பார்க்க வேண்டி இருக்கிறது. சமூக ஒழுங்கு சீர்குலைவுகளால் ஏற்படும் சமூகப் பிரச்சினைகளை ஆட்சியின் மீது ஏற்றி சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாற்றுவதில் எந்த நியாயமும் இல்லை. தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு துப்பாக்கி சூடு போன்ற பெரிய சம்பவங்கள் ஏதும் நிகழ்ந்ததும் இல்லை. இயற்கை சீற்றங்களால் தொடர்ந்து மக்கள் பாதிப்புக்கு உள்ளாகி வரும் நிலையில் முதல்வர், துணை முதல்வர், அமைச்சர்கள் மற்றும் அரசு இயந்திரங்கள் உடனடியாகக் களத்தில் இறங்கி செயல்படுவதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு சில ஊடகங்களைத் தவிர பெரும்பாலான ஊடகங்கள் இயற்கை சீற்றங்களின் மக்கள் பாதிப்பை அரசுக்கு எதிரான பரப்பரையாக ஊடக ஒழுங்கின்றி செயல்பட்டு வருகின்றன. மக்கள் கருத்து என்று ஆட்சிக்கு எதிரான நபர்களை மட்டும் தேடிப் பிடித்து பேச வைக்கிறார்கள். பாதிப்புகள் என்று படம் பிடித்து காட்டுகின்ற காட்சிகளிலும் கூட நேர்மை இல்லை. ஒரு சில போராட்டங்களைத் தவிர பெரும்பாலான சாலை மறியல்கள் மக்கள் கோரிக்கைகள் என்பதைவிட ஆட்சிக்கு எதிரான அரசியலாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. தேர்தல் அரசியல் ஈடுபடுத்திக் கொள்ளாத பெரியார் இயக்கம் இதை சுட்டி காட்டுவதை தனது கடமையாக கருதுகிறது

### தீர்மானம் 3

பி ற் ப டு த் த ப் ப ட் டே ா ர் இடஒதுக்கீட்டுக்கான கிரிமிலேயர் வரம்பு தொடர்ந்து எட்டு ஆண்டுகளாக 8 இலட்சமாக மட்டுமே இருப்பதை மேலும் உயர்த்தி இட ஒதுக்கீட்டு பயன்களை பெறுவதற்கான தடையை, தடைகளை ஒன்றிய அரசு நீக்க வேண்டும் என்று இந்த செயலவை வலியுறுத்துகிறது

தமிழ்நாடு அரசு சட்டப்படி ஜாதிவாரி சென்சஸ் எடுக்க முடியாது. ஜாதிவாரி சர்வே மட்டுமே எடுக்க முடியும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பல்வேறு ஆணையங்கள் நியமிக்கப்பட்டு அதற்கு ஏற்ப இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. 69% ஆக இட ஒதுக்கீடு தமிழ்நாட்டில் இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இன்றையத் தேவை ஒன்றிய அரசின் ஜாதிவாரிக் கணக்கெடுப்பு தான். ஒன்றிய அரசு 2017இல் நியமித்த ரோகிணி ஆணையம் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் தேவைப்படுகிற மாற்றங்களை ஒன்றிய அரசுக்கு பரிந்துரையாக 2023லேயே வழங்கியிருக்கிறது. ஒன்றிய ஆட்சி இதுவரை அதை வெளியிடவில்லை. இந்த நிலையில் ஜாதி வாரி கணக்கெடுப்பு எடுக்க வேண்டிய கடமையும் உரிமையும் ஒன்றிய ஆட்சிக்கே உள்ளது என்பதை சுட்டிக் காட்டுவதோடு, அந்த கணக்கெடுப்பின் அடிப்படையில் ரோகிணி ஆணையப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் இந்த செயலவை வலியுறுத்துகிறது.

### தீர்மானம் 4

அர்ச்சகர் பயிற்சி பெற்ற 28 அர்ச்சகர்களுக்கு தமிழக அரசு ஆட்சிக்கு வந்த 100ஆவது நாளில் பணி நியமன ஆணைகளை வழங்கியது. இதை எதிர்த்து நீதிமன்றங்களில் வந்த வழக்குகளால் அடுத்த கட்ட நியமனங்கள் நடைபெறாமல் தடைபட்டு நிற்கின்றன. அறநிலையத்துறை மவுனத்தை உடைத்து நீதிமன்றத் தடைகளை நீக்கும் சட்டரீதியான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று இந்த செயலவை வலியுறுத்துகிறது.

### தீர்மானம் 5

வரலாற்றில் தீண்டாமைக்கு எதிராக மக்களை அணி திரட்டி நடத்தப்பட்ட முதல் போராட்டம் ‘வைக்கம் சத்தியாகிரகம்’ தான். இரண்டுமுறை சிறை சென்ற ஒரே தலைவர், கிரிமினல் சட்டப்படி தண்டிக்கப்பட்ட ஒரே தலைவரும் பெரியார் தான். போராட்டத்தின் வெற்றிக்கு வழிவகுத்து - வெற்றி விழாக் கூட்டத்துக்கு தலைமை தாங்கியவர் பெரியார்.

வைக்கம் போராட்டம் நினைவாக 1985ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் திறக்கப்பட்ட நினைவகத்தை மீண்டும் புதுப்பித்து திறந்துவைத்துள்ளார் தமிழ்நாடு முதல்வர். கோவையில் பெரியார் பெயரில் மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி மய்யத்தையும் ஜனவரியில் தொடங்கி வைக்கவுள்ளார். பெரியாரின் பிறந்தநாளை சமூகநீதி நாளாக அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளார். பெரியாரை ‘குறியீடுகளாக’ நிறுத்திவிடாமல் அவர் வலியுறுத்திய கொள்கைகளையும் முன்னெடுத்து வருகிறார். திராவிட மாடல் அரசின் இந்த ‘பெரியாரிய’ கொள்கைப் பணியை திராவிடர் விடுதலைக் கழகம் பாராட்டி மகிழ்கிறது.

### தீர்மானம் 6

மக்களுக்கு மாற்றுப் பண்பாடாக மதச்சார்பற்ற விழா கொண்டாட்டங்களை வளர்த்து எடுக்க வேண்டும். அவ்வாறு ஜாதி மதம் கடந்த மக்கள் கூடுகைகள் விழாக்களாக மாற்றப்படுவது சமூக ஒற்றுமைக்கு வழிவகுக்கும். பொங்கல், மே தினம், மனித உரிமை நாள், மகளிர் தினம் போன்ற மதச்சார்பற்ற விழாக்களின் வரிசையில் அண்மைக்காலமாக பல நகரங்களில் இளையோர்கள் ஒன்று கூடி நடத்தும் வீதி திருவிழாக்கள் மிகச் சிறந்த முன்னெடுப்பாகும். அதை மென்மேலும் பரவலாக்க வேண்டும் என்று இந்த செயலவை கேட்டுக்கொள்கிறது.

## வாக்குப்பதிவு முறைகேடுகளை மறைக்க சதி

வாக்குப்பதிவு எந்திரங்களில் தில்லுமுல்லு நடக்கும் குற்றச்சாட்டுகள் எழுந்துவருகின்றன. இதை உறுதி செய்கிறது ஒன்றிய ஆட்சி! ஹரியானா தேர்தலில் முறைகேடுகள் நடந்ததாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கில் வாக்குச்சாவடியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கேமிராக்களை சமர்பிக்க நீதிமன்றம் கோரியிருந்த நிலையில் அவசர அவசரமாக தேர்தல் ஆனையத்தின் நடத்தை விதிமுறைகளை ஒன்றிய ஆட்சி மாற்றியமைத்துள்ளது. 1961ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிமுறைகளின் படி தேர்தல் தொடர்பான அனைத்து விவரங்களையும் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வோருக்கு வழங்க வேண்டும். இப்போது இந்த சட்டத்தை அவசர அவசரமாக நீதிமன்றம் கேட்டால் கூட கண்காணிப்புக் கேமிரா உள்ளிட்ட விவரங்களை தாக்கல் செய்ய தேவையில்லை என்று சட்டத்தை திருத்திவிட்டார்கள். இந்த முறைகேடை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் காங்கிரஸ் வழக்கு தொடர்ந்துள்ளது.

## தேர்வுப் படிவங்களுக்கு ஜி.எஸ்.டி.

உ.பி.யில் மருத்துவத்துறை தொடர்பான வேலைகளுக்கு தேர்வு நடத்தப்படுகிறது. தேர்வுக்கு அனுப்ப வேண்டிய விண்ணப்பப் படிவங்களை விலைக் கொடுத்து தான் வாங்க வேண்டும். அது மட்டுமின்றி ஒவ்வொரு தேர்வுப் படிவத்துக்கும் 18 சதவீத ஜி.எஸ்.டி வரி விதிக்கப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கா காந்தி இதைக் கண்டித்து அறிக்கை விட்டுள்ளார்.

**தலையங்கம்**

# எது ‘கல்வித்தரம்’?

தேசியக் கல்விக் கொள்கையை மாநிலங்கள் மீது ஒன்றிய ஆட்சித் திணிக்கத் தொடங்கிவிட்டது. அய்ந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு தேர்வுகளில் மாணவர்கள் தேர்ச்சிப் பெறாவிட்டால், அவர்களை மேல் வகுப்புக்கு அனுப்பக் கூடாது என்பது அந்தக் கல்விக் கொள்கையின் ஒரு திட்டம். தேர்ச்சி பெறாதவர்களுக்கு இரண்டு மாதத்தில் மறு தேர்வு நடத்த வேண்டும் என்றும், அதிலும் தேர்ச்சி பெறாவிட்டால் அவர்கள் தோல்வியடைந்தவர்கள் என்றும் ஒன்றிய ஆட்சி அரசாணை ஒன்றைப் பிறப்பித்துள்ளது. தமிழ்நாட்டில் ‘திராவிட மாடல்’ ஆட்சி நடப்பதால், இந்த தண்டனையில் இருந்து தமிழ்நாட்டு மாணவர்கள் தப்பியுள்ளனர். தமிழ்நாடு அரசு – மாநில அரசுக்கு உட்பட்ட பள்ளிகளில் இதைச் செயல்படுத்த முடியாது என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் உடனடியாகப் அறிவித்துவிட்டார்.

அவசர நிலை காலத்தில் பிரதமர் இந்திராகாந்தி ஆட்சியில் கொண்டுவந்த சட்டத்திருத்தத்தில் இடம்பெற்றுள்ள ‘மதச்சார்பின்மை’ என்ற கொள்கையை நீக்க வேண்டும் என்று துடிக்கிறது ஒன்றிய ஆட்சி. அதே காலத்தில் கொண்டுவரப்பட்டது தான் மாநிலத்தின் கல்வி உரிமைப் பறிப்பு. ’மதச்சார்பின்மை’ திணிப்பை எதிர்ப்பவர்கள் ’கல்வி உரிமை’ப் பறிப்பை ஏன் எதிர்க்கவில்லை? மாறாக ஆதரிக்கிறார்கள். தீவிரமாகப் பயன்படுத்துகிறார்க்ள்.

அய்ந்தாம் வகுப்பு, எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ’கல்வித்தரம்’ பேசுவது சமூக அநீதியின் உச்சம். இட ஒதுக்கீடு கொள்கையை எதிர்த்தப் பார்ப்பனர்கள், தகுதி, திறமையை ஒழித்துவிடும் என்றார்கள். அந்த வாதம் அபத்தமானது என்று வரலாறு நிரூபித்துவிட்டது. இட ஒதுக்கீடுப் பிரிவு மாணவர்கள் தான் பல்வேறு துறைகளில் சாதனைகளை குவித்து வருகிறார்கள். பொதுப்பட்டியலில் (Open Category) ‘கல்வித்தரம்’ பேசும் குடும்பத்தில் இருந்து வந்த மாணவர்களைப் பின்னுக்குத் தள்ளி முன் வரிசையில் நிற்கிறார்கள். ’உயர் ஜாதி ஏழைகளுக்கு’ தனி இட ஒதுக்கீடு கொண்டு வந்த போதே இவர்கள் பேசும் தகுதி, திறமை புதை குழிக்குப் போய்விட்டது. இட ஒதுக்கீடு சமூகத்தோடு தகுதி, திறமை சமூகம் போட்டியிட்டு வெற்றி பெற முடியாது என்பதை ஒப்புக் கொண்டுதான் உயர்ஜாதி தனி இட ஒதுக்கீடு வந்துள்ளது.

பள்ளிக்கல்வியில் படிக்கும் மாணவர்களின் தகுதி அவர்கள் தேர்வில் பெறும் ’மதிப்பெண்கள்’ தானா? பள்ளிப் பருவம் என்பது மாணவர்களின் தன்னம்பிக்கை மற்றும் கற்றலை ஊக்குவிப்பதுமே ஆகும் என்று கல்வியாளர்கள், உளவியலாளர்கள் கூறுகிறார்கள். படிப்பின் மீதான அச்சம், மதிப்பெண்கள் பற்றிய கவலை, குடும்பச்சூழல், தாழ்வு மனப்பான்மை உள்ளிட்டப் பிரச்சனைகள் மாணவர்களை சூழ்ந்திருக்கிறது. மாணவர்களை இதில் இருந்து விடுவிக்க ‘மனம்’ என்ற உளவியல் ஆலோசனைத் திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

வளர் இளம் பருவத்தினரான இளைஞர்களிடையே ‘‘கூட்டுச் செயல்பாட்டு உணர்வை’’ உருவாக்கி ‘‘நேர்மறையான நல வாழ்வு’’ செயல்பாடுகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

ஆனால் பார்ப்பனியமோ இந்த சமூகவியல் பார்வையைப் புறந்தள்ளுகிறது. மனப்பாடம், நினைவாற்றல், மதிப்பெண் மட்டுமே மாணவர்களுக்கான தகுதியாகப் பேசுகிறார்கள். வேத காலம் முதல் இதுவே அவர்களின் பார்வை. எழுத்தில் எழுதப்படாத வேதத்தை, மனப்பாடம் செய்து நினைவாற்றல் வழியாக பொருள் புரியாமலேயே ஒப்பித்தல் தான் கல்விக்கான தகுதி என்றார்கள். வேத பாடசாலைகளில் வரையறுக்கப்பட்ட அதே ’தகுதி’யைத்தான் இப்போது இந்துத்துவா ஆட்சியும் தனது கல்விக் கொள்கை என்று அறிவிக்கிறது.

1954ஆம் ஆண்டு ராஜகோபாலாச்சாரி முதல்வராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட புதியக் கல்வித் திட்டமும் தொடக்கப்பள்ளி மாணவர்களைக் குறிவைத்தது. காலையில் படிப்பு, பிற்பகலில் குலத் தொழில் என்பதே அந்தத் திட்டம். பெட்ரோலும் தீப்பந்தமும் தயாராகட்டும் என்று தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்தார் பெரியார். ஆச்சாரியார் முதல்வர் பதவியை விட்டே ஓடினார் என்பது வரலாறு.

அதே வழியில் 18 வயது இளைஞர்கள் பரம்பரைத் தொழிலை நோக்கித் திருப்புவதற்கு ஒன்றிய ஆட்சி கொண்டுவந்த திட்டம் தான் ‘விஸ்வகர்மா’. தந்தை செய்த பரம்பரைத் தொழிலுக்கான ‘சான்றிதழ்’ காட்டி இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவித்தொகையைப் பெற முடியும். ’திராவிட மாடல்’ ஆட்சி எந்த ஜாதியும், எந்தக் கைவினைத் தொழிலையும் செய்யலாம் என்று ‘கலைஞர் கைவினைத் திட்ட’த்தை அறிவித்துள்ளது. இப்போது தமிழ்நாடு பள்ளி மாணவர்களின் கல்வியை சிதைக்கும் திட்டத்தை ஏற்க முடியாது என்று அறிவித்துவிட்டது.

நாட்டில் உள்ள தலைசிறந்த கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி படிக்கச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விச் செலவை அரசே ஏற்கும் என்று அறிவித்து, அதற்கு நிதி ஒதுக்கீட்டையும் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசு, அரசுப்பள்ளிகளை சமூகநீதியின் குறியீடாகக் கருதுகிறது. அங்கு தான் ஒடுக்கப்பட்ட – பொருளியல் வசதியற்ற மாணவர்கள் படிக்க வருகிறார்கள். கட்டணமில்லாக் கல்வி வழங்கப்படுகிறது. அந்தப் பள்ளிகளிலும் ‘மதிப்பெண்’ என்ற தகுதியைப் புகுத்தி சமூகநீதியின் நோக்கத்தை சிதைக்கிறது ஒன்றிய ஆட்சி!

# மக்கள் அரசியலைப் பேசும் விடுதலை – 2



***இயக்குநர் வெற்றிமாறனின் ’விடுதலை – 2’ பேசுபொருளாகியிருக்கிறது. மசாலா படங்கள் அணிவகுத்து நிற்கும் தமிழ்ச்சூழலில் அரசியல் வரலாற்றைப் பேசியிருக்கிறது என்பதற்காக மட்டும் வெற்றிமாறன் அவர்களுக்கு சல்யூட்..***

*தேர்தல் அரசியலுக்கு முகம் கொடுக்காத இடதுசாரி அரசியல் பார்வையைப் படம் பேசுகிறது. வர்க்க அரசியல் – தேசிய இன விடுதலை அரசியல் – அழித்தொழிப்பு அரசியல் மீண்டும் மக்கள் அரசியல் என்று பெருமாள் வாத்தியாரின் அரசியல் நகர்வுகள் படத்தின் மய்ய இழை.*

*ஒவ்வொரு அரசியலுக்குமான தத்துவார்த்த விளக்கமும் வசனங்களாக முன்வைக்கப்பட்டுள்ளன. இரண்டொரு காட்சிகளில் பெரியாரின் சமூக மாற்றத்திற்கான கருத்துகளும் வலிமையாகக் படமாக்கப்பட்டுள்ளன.*

*பெருமாள் வாத்தியாரின் இணையர் கதாப்பாத்திரம் பெண் விடுதலையின் குறியீடாக்கப்பட்டுள்ளது. உடையில் ஆண் – பெண் பாகுபாடு கூடாது, பெண்களை “தாரை” வார்க்கும் வைதீக திருமணத்துக்கு மாற்றாக சுயமரியாதைத் திருமணம், நீண்ட கூந்தலை வளர்க்காதீர்கள்– ’கிராப்’ வெட்டிக்கொள்ளுங்கள் என்ற பெரியாரின் பெண்ணியப் பார்வையிலான கருத்துகள் உணர்வுப்பூர்வமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது. பெரியாரை அடையாளப் படுத்தாவிட்டாலும், பெரியாரியல் உணர்ச்சிப்பூர்வமாக படமாக்கப்பட்டுள்ளது.*

*செஞ்சட்டைத் தோழர்களும், கருஞ்சட்டைத் தோழர்களும் மக்களின் சுயமரியாதைக்கும் – உரிமைக்கும் களம் காணும் போராளிகளாக இருந்திருக்கிறார்கள் என்ற வரலாற்றை இளைய சமுதாயத்தின் கவனத்துக்கு கொண்டுவந்திருப்பது படத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பு.*

*குடும்ப உறவுகளை எதிர்த்து புரட்சிப் பெண்ணாக மாறியத் தோழியை திருமணம் செய்தவர், திருமணத்துக்குப் பிறகு புரட்சிப் பாதைக்கு அழைக்காமல் குடும்பப் பெண்ணாகவும் குழந்தைகளைப் பெற்று ‘வத்தல் – வடகம்’ காய வைப்பவராகவும் மாற்றலாமா என்ற கேள்விகள் ஊடகங்களில் எழுப்பப்படுகின்றன. கேள்விகள் நியாயம் தான்; ஆனாலும் தேர்தல் பாதையில் இருந்து விலகி மக்கள் இயக்கங்களை அர்ப்பணிப்புடன் நடத்திய கருப்பு – சிவப்பு இயக்கங்களின் வரலாற்றைப் பேசுவதற்காக இப்படத்தை ஆதரிக்க வேண்டும்.*

***– கண்டு வந்தவன்.***

# பெரியார் முழக்க வளர்ச்சி நிதி!

பெங்களூரு கழகத் தோழர் சித்தார்த்தன், தனது பிறந்தநாளை முன்னிட்டு கழக வார ஏடான ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு ரூ.5000/– நன்கொடை வழங்கினார்.

கோவை மாநகரச் செயலாளர் வெங்கடேசன் – இராஜலட்சுமி இணையரின் மகன் அறிவுக்கனலின் 7ஆவது பிறந்தநாளை முன்னிட்டு ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு ரூ.1000/– நன்கொடை வழங்கினார்.




தந்தை பெரியாரின் 51ஆவது நினைவுநாள் சுவரொட்டி.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கம்

# சட்ட எரிப்புப் போராட்டத்தில் பெரியார் பங்கேற்காதது ஏன்?

**டிசம்பர் 01,2024 அன்று நங்கவள்ளி பெரியாரியல் பயிலரங்கத்தில் தோழர் எழுப்பியக் கேள்விக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி அளித்த பதில்.**



*கேள்வி : அரசமைப்புச் சட்ட எரிப்பின் போது பெரியார் எரிக்கவில்லை என்று படித்துள்ளேன். அவர் உண்மையில் அந்தப் போராட்டத்தில் பங்கெடுத்தாரா? அவர் எந்தெந்தப் பிரிவுகளை எரித்தார்?*

**பதில் :** அரசியலமைப்புச் சட்டத்தில் மத உரிமைகள் பற்றியுள்ள 25.26ஆவது பிரிவை பெரியார் எரித்தார். பிரிவு 372. இது அரசியல் சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு நடைமுறையில் இருந்த சட்டங்கள் எல்லாம் செல்லும் என்று கூறுகிறது. நாடாளுமன்றத்தால், சட்டமன்றத்தால், இயற்றப்படுவது சட்டம். அதுமட்டுமில்லாமல் பழக்க வழக்கங்களுக்கும் சட்ட வலிமை உண்டு என்று கூறும் 13ஆவது பிரிவு.

சேதுபதி மன்னரின் மனைவி, முத்துராமலிங்கம் என்பவரைத் தத்தெடுக்கிறார். ஒரு பெண் கணவனை இழந்த பின் தத்தெடுக்க முடியாது என்பதால் ஆங்கிலேய அரசாங்கம் அதற்கு ஒத்துக்கொள்ள மறுத்தது. ஆங்கிலேயர்கள் ‘லேப்ஸ்’ கொள்கையை அறிமுகப்படுத்தியிருந்தார்கள். அது மன்னர்களுக்கு வாரிசு இல்லையென்றால் அதன் சொத்துக்கள் ஆங்கிலேயருக்கு சேர்ந்துவிடும் என்று அந்த சட்டம் வலியுறுத்துகிறது. இதுவும் சிப்பாய் கலகம் உருவாகக் காரணமாக அமைந்தது. அதே போல சேதுபதி மன்னரின் மனைவி தத்தெடுத்தது செல்லாது என்று அவர்களது பங்காளிகளும் வழக்குத் தொடுத்தனர். அந்த வழக்கு லண்டனில் பிரிவி கவுன்சில் வரைக்கும் சென்றது.

நம் தரப்பில் இருந்து வாதிடும் போது, நாங்கள் ”திரவிடியன் ஸ்கூல் ஆஃப் இந்து லா” வைத்தான் பின்பற்றுகிறோம். இங்கு திராவிடர்களான பெண்களுக்கும், விதவைகளுக்கும் தத்தெடுக்கும் உரிமை உண்டு என்று வாதிட்டனர். ஆனால் இந்து சட்டத்தில் பெண்களை தத்தெடுக்க முடியாது. பெண்களுக்கும் தத்தெடுக்கும் உரிமைக் கிடையாது. அப்போது திரவிடியன் ஸ்கூல் ஆஃப் இந்து லா பெண்களுக்கு தத்தெடுக்கும் உரிமை உண்டு என்று கூறுகிறது. ஆனால் பழக்கவழக்கங்கள் என்பது எழுதப்பட்ட சட்டங்களை விட வலுவானது என்று பிரிவி கவுன்சில் தனது தீர்ப்பில் குறிப்பிட்டது.

1929இல் ஆதி திராவிடர் மாநாடு நேப்பியர் பூங்காவில் நடைபெற்றது. அந்த மாநாட்டில் பெரியார் பேசினார். அந்த உரையில், இதுவரைக்கும் உங்களை கடவுள் பெயரைச் சொல்லி ஏமாற்றினார்கள், வேதம், புராணம், இதிகாசம் என்றெல்லாம் உங்களை ஏமாற்றினார்கள். புதிதாக இப்போது பழக்க வழக்கம் என்ற ஒன்றையும் சொல்கிறார்கள். நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பெரியார் பேசினார்.

1931இல் காங்கிரஸ் கட்சி ”மாதிரி சட்டத்தை” உருவாக்கியது. அதில் பழக்க வழக்கங்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. உடனே விருதுநகர் மாநாட்டில் பெரியார், கராச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட பழக்கவழக்கம் - மத நடுநிலைமை மற்றும் சிறுபான்மையினரின் கலாச்சாரத்தைப் பாதுகாப்பது உள்ளிட்ட மூன்று தீர்மானங்க ளையும் கடுமையாக எதிர்த்துப் பேசினார்.

அப்போது பெரியார் மத நடுநிலைமை கூடாது; மதச் சார்பின்மை தான் வேண்டும் என்றார். பழக்க வழக்கங்களை நீக்குங்கள் என்றார். பார்ப்பனர்கள் தங்கள் கலாச்சாரத்தை, மொழியைப் பாதுகாப்பதற்காக எழுதப்பட்ட சட்டம் என்று காங்கிரஸ் மாதிரி சட்டத்தை எதிர்த்து 1931 ஆகஸ்டில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றினார். மதம் சார்ந்த நிகழ்வுகளுக்கு விடுமுறை அளிக்கக் கூடாது என்றும் அப்போது தான் தீர்மானம் போட்டார் பெரியார்.

பி.வி.கானே என்பவர் இந்து சட்டங்களை முழுமையாக தொகுத்து 5 தொகுதிகளாக வெளியிட்டார். அதில் உள்ளவற்றை ஆதாரமாகக் காட்டித்தான் இப்போதும் அர்ச்சகர் நியமனங்களில் நமக்கான உரிமைகளை மறுக்கப்பட்டுவருகிறது. பிரிவு 25,26. மத உரிமை என்ற பெயரால் நமக்கு அர்ச்சகராகும் உரிமையை மறுக்கிறார்கள். பிரிவு 368, சட்டத் திருத்தங்களை செய்ய வழிவகை செய்கிறது. இது தென்னிந்தியர்களுக்கு ஆபத்தானது என்று கூறி அந்தச் சட்டப்பிரிவுகளையும் பெரியார் எரித்தார்.

1957, நவம்பர் 3ஆம் தேதி தஞ்சையில் நடைபெற்ற ஸ்பெஷல் (சிறப்பு) மாநாட்டில் இந்த சட்டப்பிரிவுகளை திருத்த வேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டது. திருத்தவில்லை என்றால் அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நவம்பர் 26 அன்று அந்தப் பிரிவுகளை எரிப்பேன் என்று அறிவித்தார். அதுதான் சட்ட எரிப்புப் போராட்டம்.

குத்து வெட்டுக் கொலை வழக்கு என்ற ஒரு வழக்கை பெரியார் மீது போடுகிறார்கள். பெரியார் கூட்டங்களில் பங்கெடுத்துப் பேசும் போது நிலைமை இப்படியே இருக்கும் என்றால் ஒருநாள் தேதி குறித்து சொல்கிறேன். தீப்பந்தத்தையும், பெட்ரோல் கேனை கையில் வைத்துக் கொள்ளுங்கள். நான் சொல்லும் போது அக்கிரகாரத்தின் மீது நெருப்பு வையுங்கள். தப்பித்து வருகிறவர்களை கத்தியில் குத்துங்கள் என்றார்.

அந்த வழக்கின் போது நீதிமன்றத்தில் ஆஜரான பெரியார் ஆம் நான் சொன்னேன், இப்படிப் பட்டப் போராட்டங்களால் பலனில்லை என்றால் இதைத்தான் செய்யப் போகிறோம். ஆனால் தற்போது இல்லை என்று கூறினார். அந்த வழக்கில் தான் டிசம்பர் 25ஆம் தேதி அதாவது சட்ட எரிப்புப் போராட்டத்துக்கு முதல்நாள் பெரியார் கைது செய்யப்பட்டார். அதுவும் சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக ரயில் மூலம் திருச்சியில் இருந்து சென்னை செல்லும் போது பெரியார் கைது செய்யப்பட்டார். அதனால் பெரியார் சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

# யார் இந்த பிரதாப் சாரங்கி?

புரட்சியாளர் அம்பேத்கரை அவமதிக்கும் வகையில் உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசியதைக் கண்டித்து, டிசம்பர் 19-ஆம் தேதி ராகுல் காந்தி தலைமையில் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதன் பின்னர், ராகுல் காந்தி நாடாளுமன்றத்துக்குள் நுழைய முயன்றார். அங்கு, பாஜக எம்.பி.க்கள் சிலரும் வேண்டுமென்றே வந்ததால், தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் ஒடிசாவைச் சேர்ந்த பாஜக எம்.பி. பிரதாப் சாரங்கி கீழே விழுந்து காயமடைந்தார்.

இவர் கூட்ட நெரிசலில் தடுமாறி கீழே விழுந்த நிலையில், ராகுல் காந்தி தான் தள்ளிவிட்டார் என்று பிரச்சினையை திசை திருப்பியது பாஜக. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முதல் நாளில் சிறிய கட்டுடன் காணப்பட்ட பிரதாப் சாரங்கி, மறுநாள் தலை முழுவதும் கட்டுபோடப்பட்ட புகைப்படங்கள் வெளியாகின. ஒன்றிய அமைச்சர்களும், பாஜக நிர்வாகிகளும் வரிசையாக மருத்துவமனைக்குச் சென்று பிரதாப் சாரங்கிக்கு ஆறுதல் சொல்லுவது என உச்சபட்ச நாடகங்களை அரங்கேற்றியது பாஜக. இந்த நாடக அரங்கேற்றங்களுக்கு மத்தியில் பிரதாப் சாரங்கி யார் என்ற வரலாறும் அம்பலமானது.

1999-ஆம் ஆண்டு ஒடிசாவின் மனோகர்பூர்-கியோஞ்சர் ரயில் நிலையத்தில் வைத்து ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பாதிரியார் கிரகாம் ஸ்டெயின்ஸ் மற்றும் அவரது குழந்தைகளான பிலிப், தியோதி ஆகிய மூவர் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர். இந்தக் கொடூரச் செயலை செய்தது பஜ்ரங் தள் இந்துத்துவா கும்பல். அப்போது அதன் தலைவராக இருந்தவர் பிரதாப் சாரங்கி.

இந்த கொலைச் சம்பவத்தில் பஜ்ரங் தளை சேர்ந்த தாரா சிங் மற்றும் 11 பேர் குற்றவாளிகள் என 2003-ஆம் ஆண்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதில் தாரா சிங்கிற்கு தூக்குத் தண்டனையும், மற்ற 11 பேருக்கு ஆயுள் தண்டனையும் அளிக்கப்பட்டது. அந்த



11 பேரில் பிரதாப் சாரங்கியும் ஒருவர். இவர்கள் 12 பேரும் ஒடிசா மாநில உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். விசாரணை அமைப்புகள் உரிய ஆதாரங்களைத் திரட்டி சமர்ப்பிக்கத் தவறியதால், தாரா சிங்கின் தூக்குத்தண்டனை ரத்து செய்யப்பட்டது. பிரதாப் சாரங்கி உள்ளிட்ட மற்ற 11 பேரும் விடுவிக்கப்பட்டனர்.

அதன்பிறகு ஒருவாரம் கழித்து, உச்சநீதிமன்ற நீதிபதி வாத்வா தலைமையில் நீதி விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. ஆனால் இந்த விசாரணை குழுவுக்கு தேவையான ஆதாரங்கள் வழங்கப்படவில்லை. ஒடிசா மாநில உளவுத்துறையின் செயல்பாடுகளையும் இந்தக் குழு விமர்சித்தது. உண்மையில் பஜ்ரங் தள் அமைப்புதான் இந்த கொடூரச் செயலை செய்தது என்பதற்கான ஆதாரங்கள் இருந்தன. தேசிய சிறுபான்மையினர் ஆணையம் தனது அதிகாரப்பூர்வ விசாரணையில், கொலைக் குற்றவாளிகள் தாக்குதலுக்கு முன் “பஜ்ரங் தள் ஜிந்தாபாத்” என்று முழக்கமிட்டதை உறுதி செய்தது.

கிறித்துவ மிஷினரிகளை பிரதாப் சாரங்கி, கடுமையாக விமர்சித்துப் பேட்டி அளித்திருப்பதாக அம்மாநிலத்தைச் சேர்ந்த பி.பி.சி. செய்தியாளர் சந்தீப் சாகு என்பவரும் கூறியுள்ளார். ஏற்கெனவே இந்த கும்பலுக்கு மிஷனிரிகள் மீது நீண்டகாலமாக இருந்த வன்மத்தின் காரணமாகத்தான் இக்கொலைகள் நிகழ்த்தப்பட்டன என்பதை இச்செய்தி உறுதி செய்கிறது. இதுமட்டுமல்ல, 2002-ஆம் ஆண்டில் ஒடிசா மாநில சட்டமன்றத்தின் மீது இந்துத்துவா கும்பல் கண்மூடித்தனமாக நடத்திய தாக்குதல் வழக்கிலும் பிரதாப் சாரங்கி கைது செய்யப்பட்டார்.

சிறு வயது முதலே ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ ஹிந்து பரிஷத், பஜ்ரங் தள் ஆகிய இந்துத்துவ அமைப்புகளில் பணியாற்றிய இவர், இத்தகைய வன்முறைச் செயல்களுக்குப் பின்னர் தேர்தல் அரசியலுக்குள் நுழைந்தார். 2019ஆம் ஆண்டில் ஒன்றிய இணை அமைச்சராகவும் இவருக்கு பொறுப்பு வழங்கியது பாஜக அரசு. இப்போது இவரைத்தான் தள்ளிவிட்டுவிட்டார் ராகுல் காந்தி என பாஜக கொக்கரிக்கிறது.

### கல்வியைத் தடுக்கும் அப்பாவை கைது செய்யுங்கள்!

சேலம் கே.ஆர்.தோப்பூர் பகுதியைச் சேர்ந்த 10ஆம் வகுப்பு மாணவி சீருடையுடன் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்து ஒரு மனு கொடுத்தார். “எனது அப்பா, மது குடித்துவிட்டு என்னையும், எனது அம்மாவையும் அடித்துத் துண்புறுத்துகிறார். என்னை ஸ்கூலுக்கு போகக்கூடாது என்று மிரட்டுகிறார். என் அக்காவையும் மிரட்டி 11ஆம் வகுப்போடு நிறுத்திவிட்டார். நாங்க படிக்க வேண்டும். எங்க அப்பா மீது நடவடிக்கை எடுங்க” என்று கண்ணீர் மல்க கூறினார். இதுதான் தமிழ்நாடு! இதுதான் தமிழ்நாட்டின் கல்வி உளவியல். கல்வியைத் தடுத்தால் பெற்ற தந்தையானாலும் தண்டிக்கும் ‘மண்’.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# கழகத் தலைமைக்குழு - செயலவை மேட்டூரில் கூடியது

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழுக் கூட்டம் மேட்டூரில் 20.12.24 சனி அன்று மாலை 5.00 மணிக்கு கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இத்தலைமைக் குழுக் கூட்டத்தில் கழகத்தின் அடுத்தகட்ட செயல்பாடுகள், பரப்புரைப் பயணங்கள், தெருமுனைக் கூட்டங்கள் ஆகியவை குறித்து ஆலோசனை நடைபெற்றது.



ஒன்றிய அளவில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களில் இயக்கத்தின் நிலைப்பாடுகள், பாஜக அரசின் மக்கள் விரோத போக்குகள், திராவிட மாடல் அரசின் சாதனைகள், ஊடகங்கள் மூலமாக திராவிடத்திற்கு எதிராக கட்டமைக்கப்படும் கருத்துருவாக்கங்கள், அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டிய பிரச்சனைகள் ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

கழகப் பொதுச்செயலாளர், பல்வேறு ஆலோசனைகளையும், திட்டங்களையும் முன்மொழிந்தார். கழகத் தலைமைக்குழு உறுப்பினர்கள் தொடர்ந்து தங்கள் கருத்துக் களையும், ஆலோசனைகளையும் கூறினார்கள்.

அடுத்த நாள் நடைபெறவிருக்கும் செயலவையில் நிறைவேற்றப்பட வேண்டியத் தீர்மானங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

நிறைவாக திராவிடம், பெரியார் மீது தொடர்ந்துப் பரப்பப்படும் அவதூறுகள், திராவிடர் இயக்கத்தின் சாதனைகள், திராவிட மாடல் அரசு மீது திட்டமிட்டு நடைபெறும் பொய்யான பரப்புரைகள் ஆகியவை குறித்து மக்களை நேரடியாக சந்தித்து பரப்புரை செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

கழகத் தோழர்களின் பல்வேறு கருத்துக்கள் ஆலோசனைகளுக்கு பிறகு தலைமை குழு கூட்டம் இரவு 9 மணிக்கு நிறைவுற்றது.

இக்கூட்டத்தில் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தின சாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலா ளர் பால்.பிரபாகரன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், சூலூர் பன்னீர் செல்வம், கு.அன்பு தனசேகரன், விழுப்புரம் நா.அய்யனார், சென்னை இரா.உமாபதி, இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், சமூக வலைதள பொறுப்பாளர் பரிமளராசன், மேட்டூர் சக்திவேல், காவலாண் டியூர் ஈஸ்வரன் ஆகியோர் பங்கேற்று தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள்.

## தி.வி.க. செயலவைக் கூட்டம்!

கழக செயலவைக் கூட்டம் 22.12.24. ஞாயிறு அன்று காலை 10:30 மணியளவில் மேட்டூர் எம்.சி.ஆர்.மகாலில் தொடங்கியது.

செயலவைக் கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

நிகழ்வின் தொடக்கமாக மேட்டூர் டி.கே.ஆர்.இசைக்குழு கோவிந்தராஜ் பகுத்தறிவு பாடல்கள் பாடினார் கடவுள் மறுப்பு வாசகத்தை திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் சங்கீதா வாசித்தார்.

செயலவை கூட்டத்தின் நோக்கம் குறித்து கழகத்தின் அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி அவர்கள் அறிமுக உரையாற்றினாார். தொடர்ந்து தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி உள்ளிட்டத் தலைமைக் குழு உறுப்பினர்கள் உரையாற்றினார்கள்.

அடுத்து உரையாற்றிய கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தற்போதைய அரசியல் சூழல், ஒன்றிய பா.ஜ.க. அரசின் மக்கள் விரோதப் போக்கு,திராவிட மாடல் அரசின் சாதனைகள் இவற்றை உள்ளடக்கி நாம் முன்னெடுக்க உள்ள பரப்புரை பயணத்தின் நோக்கம் அதன் வடிவம் குறித்தும், ஒன்றிய அளவில் அரசியல் மற்றும் சமூக அளவில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு இலக்கு நோக்கிய நம்முடைய பயணத்தில் நம்முடைய செயல்பாடுகள் எப்படியானவையாக இருக்க வேண்டும் என்பது குறித்து தன்னுடைய ஆலோசனைகளை விரிவாக எடுத்துரைத்தார்.

அடுத்ததாக தொடர்ந்து தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து வந்து பங்கேற்ற கழகத்தின் மாவட்ட பொறுப்பாளர்கள் தங்களது கருத்துக்களை ஆலோசனைகளை எடுத்துரைத்தார்கள்.

நிறைவாகக் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி செயலவையில் தீர்மானங்களை வாசித்தார். கழகத் தோழர்களின் பலத்த கரவொலிகளுக்கிடையே தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. தொடர்ந்து உரையாற்றிய கழகத் தலைவர், தீர்மானங்கள் குறித்து விரிவான விளக்கங்களையும் பரப்புரைகளை எந்த வகையில் நாம் முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்தும் கழகம் கடந்து வந்த பாதையும் நாம் எதிர் கொள்ளவிருக்கும் சவால்கள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

இச்செயலவையில் தலைமைக்குழு உறுப்பினர்கள் செயலவை உறுப்பினர்கள் தமிழ்நாடு அறிவியல் மன்றம் தமிழ்நாடு மாணவர் கழகம் - மகளிரணி - இளைஞரணி ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

நங்கவள்ளி கிருஷ்ணன் நன்றியுரை கூறினார். மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மிகச் சிறப்பாக செயலவைக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள். மதியம் அசைவ விருந்து அனைவருக்கும் வழங்கப்பட்டது.

**செய்தி : பரிமளராசன்.**

## புதிய சரித்திரம்; அரசே அகற்றும் மருத்துவக் கழிவுகள்!

நெல்லையில் கேரள எல்லையில் கொட்டப்பட்ட மருத்துவக்கழிவுகளை கேரள அரசு அதிகாரிகளே நேரில் வந்து லாரிகளில் ஏற்றிச் செல்லும் அதிசயம் - இப்போது தான் நடந்துள்ளது. தமிழ்நாடு ஆட்சி தலையிட்டது! பசுமைத் தீர்ப்பாயம் கேரள அரசுக்கு உத்தரவிட்டது. கழிவுகளை கொட்டுவதற்கு இடம் தேடி தந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். கேரள அரசு அதிகாரிகளே 30 லாரிகள் மற்றும் பொக்லைன் எந்திரங்கள் வைத்து இரண்டு நாட்களாக கழிவுகளை ஏற்றி கேராவுக்கு திரும்பினர்.

மருத்துவக் கழிவுகள் கொட்டப்படுவது எடப்பாடி ஆட்சியிலும் நடந்தது. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## நான் வாடகைக் குதிரை

நாடாளுமன்றத்தில் டிசம்பர் 14ஆம் தேதி உரையாற்றிய ஆ.இராசா, அம்பேத்கர் உரையைக் குறிப்பிட்டார். “நான் தான் சட்டத்தை எழுதியதாகக் கூறுகிறார்கள். சில நேரங்களில் வாடகைக் குதிரையாக நான் பயன்படுத்தப்பட்டேன். அதை எரிக்கும் முதல் ஆளாக நான் இருப்பேன்” என்றார். நீங்கள் எழுதிய சட்டத்தை நீங்களே எரிப்பதா என்று கேட்டதற்கு “கடவுளுக்காக ஒரு கோயில் கட்டுகிறோம். அதில் பிசாசு வந்து தங்கினால் கோயிலை இடிப்பதைத் தவிர வேறு வழியில்லை அல்லவா” என்று அம்பேத்கர் பதிலளித்ததை ஆ.இராசா சுட்டிக்காட்டினார்.

**புரட்சிப் பெரியார் முழக்கம்**

ஆண்டு சந்தா : ரூ.300/-
அய்ந்தாண்டுச் சந்தா : ரூ.1500/-

தொடர்புக்கு :
ஆசிரியர். 15. தோழமை. வெங்கடேஸ்வரா நகர். பெருங்குடி. சென்னை - 96
பேச : 8973341377

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 27, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran